செ.வெ.எண்: 31/பிப்ரவரி நாள்: 16.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருவாடானை, அஞ்சுக்கோட்டை, குஞ்சங்குளம் , செகுடி மற்றும் மங்களக்குடி ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் இன்று (16.02.2016) ஆய்வு மேற்கொண்டார்.

முதலாவதாக திருவாடானையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரூபாய் 30 இலட்சம் மதிப்பிலான வட்டார ஊராட்சி சேவை மையம் மற்றும் ரூபாய் 144 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாடானை புதிய பேருந்து நிலைய பணிகளையும், அஞ்சுகோட்டை கிராமத்தில் ரூபாய் 17 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம ஊராட்சி சேவை மையம் ,1.80 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பசுமை வீடுகள் கட்டும் பணியினையும் மற்றும் 8 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் ஊரணி ஆழப்படுத்தும் பணிகளையும், குஞ்சங்குளம் கிராமத்தில் ரூபாய் 5.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாடானை - மங்களக்குடி சாலையில் அமைந்துள்ள ஊரணியை ஆழப்படுத்தும் பணிகளையும் மற்றும் 17 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம ஊராட்சி சேவை மைய மேம்பாட்டுப் பணிகளையும், செகுடி கிராமத்தில் ரூபாய் 21.36 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தனிநபர் கழிப்பறை கட்டுமானப் பணிகளையும் மற்றும் மங்களக்குடி கிராமத்தில் பாரத பிரதம மந்திரி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 180.55 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மேம்பாட்டு பணிகள் மற்றும் ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மோர்பண்ணை கிராமத்தில் ரூபாய் 17 இலட்சம் மதிப்பிலான கிராம ஊராட்சி சேவை மைய மேம்பாட்டு பணிகள் மற்றும் 6.50 இலட்சம் மதிப்பிலான அங்கன்வாடி மைய கட்டிட பணிகள் என மொத்தம் ரூபாய் 448. 21 இலட்சம் மதிப்பிலான மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்து, இந்த பணிகளை விரைவில் முடித்திட வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, குஞ்சங்குளம் நியாய விலைக் கடை, தொண்டி பேரூராட்சி அலுவலகம் மற்றும் திருவாடானை வட்டார அலுவலகங்களுக்கு நேரில் சென்று அலுவலகப் பணிகள் மற்றும் கோப்புகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் திரு.டி.ராமசாமி, உதவி செயற்பொறியாளர் திரு.பெருமாள், உதவி இயக்குநர் (பேரூராட்சி) திரு.பாலமுருகன், வட்டாட்சியர் திரு.தர்மன், உதவி பொறியாளர்கள் திரு.அர்ச்சுனன், திரு.ராமசாமி, திரு.திலீபன் மற்றும் திரு.மகிழமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**